PRGI (RNI) No: TNTAM/2023/88599


திரை மொழி
THIRAI MOZHI

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

திரை: 03	மொழி : 11	ஜூன் - 2026	பக்கம்: 8	விலை: ரூ.10
Volume : 03	Issue : 11	June - 2026	Page: 8	Price: Rs. 10

பாரதிராஜா

மக்கள் சினிமாவை தொடங்கி வைத்த மகா கலைஞன்



எனது குருநாதர் மறைவு திரை உலகில் பெரும் இழப்பாகத் தொடர்கிறது. ஒரு திரை கலைஞன் தன் வாழ்வின் வெற்றிக்காகத்தான் முதலில் முயற்சி செய்கிறான். அவனது படைப்புகள்தான் அந்தந்தக் கலைஞர்களுக்கு புதிய முகவரியை வழங்குகிறது. திரை உலகில்தான் பெரும்பாலானவர்கள் தங்கள் இயற்பெயரை மாற்றிக் கொண்டு பயணத்தை தொடங்குவார்கள். எங்கள் இயக்குநரும் அப்படித்தான் சின்னசாமி (பால்பாண்டி) பாரதிராஜாவாக மாறி 1977 ஆம் வருடம் திரையில் இயக்குநராக அவதாரம் எடுத்தார்.

பெரும் கூட்டுக் குடும்பத்தில் பிறந்த சின்னசாமி,தன் சகோதரியின் பெயரில் பாரதியையும்,தன் தம்பி பெயரில் உள்ள (ஜெயராஜ்) ராஜாவையும் இணைத்து பாரதிராஜா என்று பெயர் சூட்டிக் கொண்டார்.

மத்திய அரசு அவருக்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்கி திரைப்படத்துறைக்கு அவரால் நிகழ்ந்த புதுமைக்கு மகுடம் சூட்ட வேண்டும்.

1941 முதல் 2026 வரை அவர் வாழ்ந்த வாழ்க்கை தமிழர்கள் அனைவருக்கும் தெரிந்து திறந்த புத்தகம்தான். எனினும் அவரிடம் உதவியாளராக இருந்து உயிர்உறவாகமாறியஎன்னைப்போன்ற சிலருக்கு அவரது வாழ்வின் ஆழமான படிமங்களை அறிய வாய்ப்புக் கிட்டியது.

பள்ளிப் பருவத்தில் நான் பார்த்த அவரது படம் "16 வயதினிலே" அதன் தொடர்ச்சியாக அவரின் படங்களை பார்க்கும் ரசிகனாகி பின்பு அவரது உதவியாளராக (புது நெல்லு புது நாத்து) படத்தில் சேர்ந்து கொண்டேன். 36 ஆண்டுகள் அவருடன் எமது வாழ்க்கையும் அவர்களது திரைப் பயணத்தில் உயிரும் உடலுமாக இணைந்து போனது. அவரது முதல் படம் "16 வயதினிலே "வெளியான போது அவருக்கு வயது 36. ஒரு மாணவனாக அவரிடம் நான் தெரிந்து கொண்டவற்றை மட்டும் நான் பார்த்த பாரதிராஜாவை இங்கே பதிவு செய்ய

தொடர்ச்சி பக்கம் 7



கவிக்கோ விழாவில் கல்வி அமைச்சர் ராஜ்மோகன்

கவிக்கோ அப்துல் ரகுமான் ஹைக்கூ கவிதை போட்டி பரிசளிப்பு விழாவும், தேர்வு பெற்ற கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவும் சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் கவிக்கோவின் நினைவு நாளான ஜூன் 2, 2026 அன்று நடை பெற்றது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்மோகன் அவர்கள் நூலை வெளியிட, இயக்குநர் ஏ. ஆர். முருகதாஸ், இயக்குநர் என். லிங்குசாமி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். விழாவில் விஷ்ணு அசோசியேட் ஆர்.சிவகுமார், இயக்குநர், கவிஞர் பிருந்தா சாரதி, எழுத்தாளர் அ. வெண்ணிலா, உமறுப் புலவர் வாரிசுகள் இலக்கிய அறக்கட்டளைத் தலைவர் அல்லாஹ் ருமைசூதீன் ஃபைஜி, பதிப்பாளர் டிஸ்கவரி வேடியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கவிக்கோவின் நினைவுகளைப் போற்றும் சொற்பொழிவுகளும், பரிசு பெற்ற ஹைக்கூ கவிதைகளைப் பற்றிய பாராட்டுரைகளும் நிகழ்ச்சியில் நடைபெற்றன.

கவிக்கோவின் ரசிகர்கள், இலக்கிய ஆர்வலர்கள் என்று அரங்கு நிறைந்து வழிந்தது.

"வாழ்க்கையில் வேறு ஏதேதோ திசைகளில் செல்ல வேண்டிய என்னை சரியான திசையில் செலுத்தியது இலக்கியம்தான். ஆகவே பல்வேறு பணிகளுக்கு இடையில் இலக்கியத்திலும் மாணவர்களும் பொதுமக்களும் ஈடுபாடு செலுத்த வேண்டும்" என்று அமைச்சர் ராஜ்மோகன் கேட்டுக்கொண்டார்.



டிரினிட்டி மாணவர்களின் கல்விசார் சாதனைகள்

டிரினிட்டி கல்வி நிறுவனங்கள் பெருமையுடன், கேம்பிரிட்ஜ் மற்றும் லண்டன் டிரினிட்டி கல்லூரியின் *GESE (Graded Examinations in Spoken English)* தேர்வில் வெற்றிகரமாகத் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் சாதனைகளைப் பாராட்டும் வகையில் பட்டமளிப்பு விழாவை சிறப்பாக நடத்தின.

எங்கள் மாணவர்களின் அர்ப்பணிப்பு, கடின உழைப்பு மற்றும் சிறப்பான செயல்திறனை அங்கீகரிக்கும் நோக்கில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சாதனை, அனைத்து டிரினிட்டி மாணவர்களுக்கும் கல்வி வளர்ச்சி மற்றும் வெற்றியை நோக்கி தொடர்ந்து முன்னேறுவதற்கான மிகப் பெரிய ஊக்கமாகவும் உந்துதலாகவும் அமைகிறது.

இந்நிகழ்வில், டிரினிட்டி கல்வி நிறுவனங்களின் இயக்குநரும் தலைவருமான டாக்டர் ஐடா எமெலான்சியா டியூக் மரியா வில்லிங்டன் அவர்கள், திரைமொழி சமூக நல அறக்கட்டளையின் நிறுவனரான திரு. ஆர். சுப்பிரமணிய பாரதி அவர்களையும், துணைத் தலைவரான திரு. ச. ஜெகநாதன் அவர்களையும் சிறப்பு விருந்தினர்களாக அழைத்து நிகழ்வை சிறப்பித்தார்.

தனது ஊக்கமளிக்கும் உரையைத் தொடங்கிய திரு. ஆர். சுப்பிரமணிய பாரதி அவர்கள், திருக்குறளின் கல்வி அதிகாரத்தில் இடம்பெறும் "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற குறளை விரிவாக விளக்கி, நாம் தினமும் கற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தையும், கற்றதை வாழ்க்கையில் செயல்படுத்துவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து பேசிய திரு. ச. ஜெகநாதன் அவர்கள், வாழ்க்கையில் சாதனை மற்றும் வெற்றியின் முக்கியத்துவத்தை விளக்கினார். மேலும், மனஅழுத்தம் மற்றும் சவால்களை எவ்வாறு நேர்மறையாக எதிர்கொள்வது என்பதையும் பகிர்ந்து கொண்டார். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் எளிதாகப் பின்பற்றக்கூடிய நடைமுறை மூச்சுப் பயிற்சிகளையும் செய்து காட்டினார்.

டாக்டர் ஐடா அவர்கள், டிரினிட்டி மாணவர்களின் கல்விசார் சாதனைகள், ஆங்கிலத் திறன் மேம்பாடு மற்றும் அவர்களின் வளர்ச்சிப் பயணம் குறித்து சிறப்பாக எடுத்துரைத்து, நிறுவனத்தின் பயிற்சி முறைகள் மாணவர்களின் வெற்றிக்கு எவ்வாறு உறுதுணையாக உள்ளன என்பதை விளக்கினார்.

நிகழ்ச்சியின் நிறைவாக, திரு. ஆர். சுப்பிரமணிய பாரதி மற்றும் திரு. ச. ஜெகநாதன் ஆகியோர் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கி அவர்களின் சாதனைகளை கௌரவித்தனர்.

சாதனை படைத்த அனைத்து மாணவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் எதிர்காலத்தில் மேலும் பல உயரங்களை எட்டி, ஒளிமயமான மற்றும் வெற்றிகரமான வாழ்க்கையைப் பெற வாழ்த்துகிறோம்



தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி நினைவேந்தல்

23.05.2026 அன்று தயாரிப்பாளர் ஆர் பி சௌத்ரி(super good film) அவர்களுக்கு நினைவேந்தல் கூட்டம் திரை மொழி மாத இதழ், டிஸ்கவரி புக் பேலஸ், அறம் தமிழ் யூடியூப் சேனல் சார்பாக கே.கே. நகர் டிஸ்கவரி புக் பேலஸ் அரங்கில் நடத்தப்பட்டது. புத்தக வாசகர்களும், சினிமா ரசிகர்களும் மற்றும் இணை, ,துணை, உதவி இயக்குநர்களும் கலந்து கொண்டார்கள்.

இதில், இயக்குநர்கள் விக்ரமன், பேரரசு, எழில், சசி, ராஜகுமாரன், பிருந்தா சாரதி, ரவி மரியா, V. பிரபாகர், பாலி ஸ்ரீரங்கம், சிவயோகி மவுரியன், இசையமைப்பாளர் சௌந்தர்யன், தயாரிப்பாளர் வேடியப்பன், பாடலாசிரியர்கள் இளைய கம்பன், தமிழ் அமுதன், சிற்பி, இணை இயக்குநர்கள் நம்பிராஜன், ஹரி, பாக்யராஜ் பரசுராமன், தங்க மித்ரன், நடிகர் விஜய் பாரத், திரை மொழி பொறுப்பாசிரியர் மூர்த்தி நடராஜன், செய்தி வாசல் ஆசிரியர் தனசேகரன். முதல் மொழி அறக்கட்டளை அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் தங்கள் நினைவுகளை பகிர்ந்து கொண்டார்கள்.

அதில், தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரி அவர்களின் மிகுந்த ரசனை, கதை தேர்ந்தெடுப்பது, திறமையானவர்களை கண்டுபிடிப்பது, சிக்கனமாக படம் தயாரிப்பது, லாபங்களை அனைவருக்கும் பகிர்ந்து தருவது,

அவர் இசையமைப்பாளர்களை தேர்ந்தெடுத்த விதம், கவிஞர்களை தேர்ந்தெடுத்த விதம், ஒரு படத்திற்கு டியூன் கேட்டு வாங்கும் விதம் பற்றி இசையமைப்பாளர்கள் சொல்லச் சொல்ல மகிழ்ச்சியாக இருந்தது. அவர் ஒரு பாடலைக் கேட்டு ஓகே என்றால் அது சூப்பர் ஹிட் ஆகும் என்றும் சொன்னார்கள். அவர் ஒரு மிகச்சிறந்த தீவிர சினிமா ரசிகராய் இருந்திருக்கிறார் என்பது அவர்கள் சொல்ல நமக்கு தெரிந்தது. சினிமாவில் எவ்வளவு பிரச்சனை வந்தாலும் இயக்குநரை விட்டுக் கொடுக்காத தயாரிப்பாளர் அவர்.

ஒருவரை இயக்குனராக ஆக்குகிறேன் என்று வாக்கு கொடுத்து விட்டால் நஷ்டமானாலும் படத்தை கொடுப்பது அவருடைய குணம். நூறாவது படத்தை மிகப் பிரம்மாண்டமாக எடுக்க வேண்டும் என்ற கனவோடு இருந்தார். அவரின் ஆசியோடு அந்த கனவை அவரின் வாரிசுகள் நிறைவேற்றுவார்கள் அதற்கு நாங்கள் எல்லோரும் பக்கபலமாக இருக்கிறோம் என்று வந்திருந்த அத்தனை இயக்குநர் பெருமக்களும் கவிஞர்களும் இசையமைப்பாளர்களும் சொன்னார்கள். இப்படி எல்லோரையும் அன்பாக அரவணைப்பது போன்ற அவரின் பல்வேறு திரைமுகங்கள் அவர்களின் நினைவுகளின் வழியாக நமக்கு தெரிய வந்தது. மிக சிறந்த தயாரிப்பாளர், திரை மேதை அவர்களை காலம் களவாடியது நம்மை பெருந்துயத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரின் ஆன்மா இறைவன் நிழல் அடியில் இளைப்பாறட்டும். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார் இணை இயக்குநர், திரைமொழி ஆசிரியர் ஆர். சுப்ரமணிய பாரதி.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் தலைவர், தேர்வுக்குழு உறுப்பினர்கள் நியமனம்

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் தலைவராக திரு. மனோஜ் பரமஹம்சா அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்.

மேலும் தமிழ்நாடு அரசு எம். ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிறுவனத்தில், 2026-2027ஆம் கல்வி யாண்டில் இளங்கலை காட்சிக்கலை பட்டப் படிப்புகளுக்கான முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்காக பின்வரும் தேர்வுக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.



மனோஜ் பரமஹம்சா




வெற்றிமாறன் லிங்குசாமி பேரரசு

திரு.ஆர்.வேல்ராஜன், ஒளிப் பதிவாளர், திரு. விஜய் மில்டன் இயக்குநர் மற்றும் ஒளிப்பதிவாளர், திரு.ஜி.பாலாஜி, வண்ண வடிவமைப் பாளர், திரு.சி.சிவகுமார், ஒலிப் பொறியாளர், திரு.சி.வெற்றிமாறன், திரைப்பட இயக்குநர், திரு.ந. லிங்குசாமி, திரைப்பட இயக்குநர், திரு. பேரரசு, திரைப்பட இயக்குநர், திரு.அ.ஸ்ரீகர் பிரசாத், திரைப்பட படத்தொகுப்பாளர், திரு.ஆர்.ராமர், திரைப்பட படத்தொகுப்பாளர், திரு.த.முத்துராஜ், கலை இயக்குநர்

கலையும் நல்லி குப்புசாமியும்

நேர்காணல்



இந்தியாவின் பட்டு வணிக வரலாற்றில் 'நல்லி' என்ற பெயர் ஒரு தனித்தன்மையான இடத்தைப் பிடிக்கிறது. 1928 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் தொடங்கிய ஒரு குடும்பத் தொழில், இன்று உலகளாவிய அளவில் 40 க்கும் மேற்பட்ட கிளைகளுடன் திகழ்கிறது. இந்த மரபின் முதுகெலும்பாக நிற்கும் டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் ஒரு தொழிலதிபர் மட்டுமன்றி, 68 க்கும் மேற்பட்ட தமிழ் நூல்களின் ஆசிரியர், கர்நாடக இசையின் தீவிர ஆதரவாளர், திரையுலகின் நெருங்கிய நண்பர், நாடகக் களத்தில் சாதனை புரிந்தவர்.

9 நவம்பர் 1940ல் காஞ்சிபுரத்தில் பிறந்த இவர், ராமகிருஷ்ண மிஷன் பள்ளியில் கல்வி கற்றார். 1958ல் தாத்தாவான நல்லி சின்னசாமி செட்டியாரின் மறைவுக்குப் பின், தொழிலை ஏற்று, அதனை இன்று வரை நேர்மையுடனும் தர உணர்வுடனும் நடத்தி வருகிறார்.

2003ல் பத்மஸ்ரீ, 2000ல் கலைமாமணி, 2025ல் பத்மபூஷண் இந்த விருதுகள் அவரது சாதனைகளுக்கு சான்று அளிக்கின்றன. கலை, கல்வி, சினிமா, நாடகம் ஆகிய பன்முகத் துறைகளில் இவர் கொண்டுள்ள ஆழமான பங்களிப்பை 'திரைமொழி' மாத இதழ் இந்தச் சிறப்பு நேர்காணலில் பதிவு செய்கிறது.

ஸ்ரீ கிருஷ்ண கான சபா, முத்ரா, மெட்ராஸ் ஃபிலிம் சொசைட்டி உள்ளிட்ட பல நிறுவனங்களில் முக்கிய பதவி வகித்தவர். **கடன் வேண்டாம் / தள்ளுபடி வேண்டாம்** என்ற கொள்கை உடையவர்.

கேள்வி : "MS Blue", "Thyaga Bhoomi", "National Border", "Durbar Pet" போன்ற வடிவமைப்புகள் இன்றும் மக்கள் மனதில் நிற்கின்றன. ஒவ்வொரு சேலை வடிவமைப்பும் எப்படி கருவியில் உருவாகிறது? ஒரு வடிவமைப்பு trend ஆக மாறுவதற்குப் பின்னே என்ன இரகசியம் இருக்கிறது?

பதில் : ஆமா. கெமிஸ்ட்ரி ஆஃபீஸர்கிட்ட ப்ளூவாவும் இருக்கக் கூடாது, கிரேவாவும் இருக்கக்கூடாது, கிரேவும் ப்ளூவும் மிக்ஸ் பண்ண மாதிரி ஒரு புடவை வேணும் அப்படின்னு சொன்னேன். நிறைய கலர்ஸ் எல்லாம் மிக்ஸ் பண்ணி பாத்துட்டு நல்ல திக் ப்ளூகலர்ல ஒரு சேலை கொடுத்தார். அப்ப சென்னைல ஏழு சபா தான் இருந்துச்சு. கச்சேரியில் ஃபர்ஸ்ட் சேலையை தான் பார்ப்பாங்க. அப்புறம் நகையை பார்ப்பாங்க. எம்.எஸ்.அம்மா அந்த ப்ளூ சேலைய கட்டிக்கிட்டு கச்சேரி பண்ணாங்க. அது பயங்கர பேமஸ்.

எம்.எஸ். ப்ளூ சேலை இருக்கான்னு கேட்டுட்டு கடைக்கு வருவாங்க. கஸ்டமர் எடுக்கும்போது எம்.எஸ்.அம்மா ப்ளூ அப்படின்னு போடுவோம். அப்புறம், காலப்போக்கில் MS புளூ ஆயிடுச்சு. 2017ல் அந்த அம்மாவினுடைய நூற்றாண்டு விழா வந்தது டாக்டர் பத்திநாத் 70, 80 பேர் ப்ளூ சேலை கேட்டிருந்தாங்க அப்படின்னு சொன்னாரு. அந்த ப்ளூ சேலையை கண்ணால பார்த்தது நான் மட்டும்தான். அந்த லெவலுக்கு என்னால ப்ளூ போட முடியல. ஆனா, கிட்டத்தட்ட போட்டு சேலையை கொடுத்தேன்.



அதுக்கு அப்புறம் எம்.எஸ். அம்மா தவறிட்டாங்க. அதுக்கு பிறகு அந்த சேலை வேணும் என்பதற்காக அவங்க வீட்டுக்கு போனேன். அவங்க வீட்ல ஆத்மா இருந்தாரு. அந்த அம்மா கட்டின எம்எஸ் ப்ளூ கலர் சேலை இருந்தா குடுங்கன்னு கேட்டேன். அந்த அம்மா இருக்கும்போது யாரோ கேட்டாங்கன்னு அது கொடுத்துட்டாங்க அப்படின்னு சொல்லிட்டாரு. அதனால அந்த சேலையும் நான் திரும்ப பார்க்க முடியவில்லை. அந்த சேலை புகழடைஞ்ச மாதிரி வேற எந்த சேலையும் புகழடையில.

கேள்வி : நீங்கள் புரவலராக உள்ள 'திசையெட்டும்' காலாண்டு இதழ் மொழியாக்க விருதுகளை வழங்கி வருகிறது. மொழியாக்கத்தின் முக்கியத்துவம் பற்றி உங்கள் பார்வை என்ன?

பதில் : அது ஆரம்பிச்சு கிட்டத்தட்ட 30 வருஷம் ஆச்சு. நெய்வேலியில குறிஞ்சி வேலன் என்பவர் நடத்திவிட்டு வந்தார். அவரோட ஃப்ரெண்ட் இந்து நடராஜன் இந்து பத்திரிகையில ரிப்போர்ட்டரா இருந்தாரு. அவர் மூலமாக நான் அவரை போய் பார்த்தேன். எனக்கு தெரிஞ்சு மொழியாக்கத்திற்கு விழா எடுக்கிறது இந்தியாவிலேயே நீங்களாதான் இருப்பீங்க அப்படின்னு அவர்கிட்ட சொன்னேன். சென்னைக்கும் வர சொன்னேன். அப்புறம் அவர் சென்னைக்கு வந்துட்டாரு.

அதுக்கப்புறம் தான் தமிழ்நாடு முழுக்க தெரிய ஆரம்பிச்சது. கலைஞர் இந்த காலாண்டு இதழை படிச்சிருக்காரு. படிச்சிட்டு ஒருத்தரை அனுப்பி குறிஞ்சிப்பாடிக்கு போய் குறிஞ்சி வேலனை சந்தித்து இதுவரைக்கும் வந்த மொத்த பத்திரிகையும் வாங்கிட்டு வா பணம் கொடுத்து வாங்கிட்டு வா என்று சொல்லி வாங்கிட்டு வந்து படிச்சாரு. அத படிச்சிட்டு தான் கலைஞர் சிறந்த மொழியாக்கம் புத்தகத்துக்கும் அரசு சார்பில் பரிசு கொடுத்தார். மைதிலி ஒரு மொழி. அந்த மொழியிலிருந்து மொழிபெயர்த்து ஒரு கதையை போட்டு இருந்தாங்க. ஆரம்பத்தில் வருஷம் ஒருத்தருக்கு விருது கொடுத்தார். அதுக்கப்புறம் நான் ஏதாவது செய்யணும்னு அவர்கிட்ட சொல்லி வேற்று மொழியிலிருந்து தமிழுக்கு வந்த கதைகள், கட்டுரைகளுக்கும், தமிழ் மொழியிலிருந்து வேறு மொழிக்கு மொழியாக்கம் செய்யப்படுற கதைகள், கட்டுரை, கவிதைகளுக்கும் பரிசு கொடுக்கணும்னு வருஷத்துக்கு குறைந்தது 10 புத்தகத்திற்கு கொடுத்தோம். இடையில கொரோனாவில் ஒரு நாலு வருஷம் விட்டுருச்சு. இப்ப தொடர்ந்து



செஞ்சிட்டு இருக்கோம். வேறு மொழியிலிருந்து நல்ல படைப்புகளை தமிழில் கொண்டு வரணும். தமிழில் இருக்கிற நல்ல படைப்புகளை வேறு மொழிகளிலும் மொழியாக்கம் செய்ய வேண்டும் என்று பாரதியாரே சொல்லி இருக்காரு. அதுதான் நாங்க செஞ்சுகிட்டு இருக்கோம்.

கேள்வி : உங்கள் வீட்டில் பெரிய நூலகம் இருப்பதாகவும், 68க்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் எழுதியுள்ளீர்கள் என்றும் அறிகிறோம். நூல் எழுதுவதற்கான உந்துதல் எங்கிருந்து வருகிறது?

பதில் : அருணோதயம் அருணன் அப்படிங்குற ஒரு பதிப்பகத்தார் எங்கிட்ட வந்து, தூர்தர்ஷன் நடராஜன் அவர்கள் உங்கள சந்திச்சு உங்களது வாழ்கை வரலாற்றை எழுத சொன்னாரு என்று என்கிட்ட பேசினார். அப்ப நான் சொன்னேன் எனக்கு பத்து வயசு இருக்கும்போது கண்ணன் என்று ஒரு கதை எழுதி பத்திரிகைக்கு அனுப்பினேன். ஆனால் அது திரும்பி வந்துருச்சு. அதிலிருந்து நான் எழுதவே இல்லை அப்படின்னு சொன்னேன். எனக்கு எழுத தெரியாதுன்னு சொன்னேன். அப்பதான் மாணிக்கவாசகர் என்ற ஒரு சீனியர் ரைட்டர நான் அனுப்புறேன். அவர் திருமந்திரத்திற்கு உரை எழுதினவர். நீங்க சொல்லுங்க அவரு எழுதிருவாரு அப்படின்னு சொன்னாரு.

எனக்கு லெட்டர் வந்தாலே நான் அதை படிக்க மாட்டேன் கீழ போன் நம்பர் இருக்கான்னு பார்ப்பேன் அது இருந்தா போன்ல பேசிருவேன். அப்பேற்பட்ட ஆளு சார் நானு அப்படின்னு சொன்னேன். எப்படியோ ஒருவழியாக என்கிட்ட கேட்டு எழுதிட்டாரு. அது வெற்றியின் கதை அப்படின்னு வந்தது. டைட்டிலை மாத்த சொன்னேன். பிறகு வெற்றியின் வரலாறு என்ற தலைப்பில் வந்தது. 1952ல சிலோன்ல அடுத்தது வியாபாரத்தை பெருக்குவது எப்படி என்று போட்டேன். அதுக்கு தமிழ்நாடு

அரசினுடைய விருது கிடைத்தது தமிழ்நாடு அரசினுடைய சிறந்த மேனேஜ்மென்ட் புக் அவார்டும் கிடைச்சது. அதுக்கு அப்புறம் தான் எனக்கு நம்பிக்கை வந்துச்சு.

கேள்வி : நீங்கள் கல்வித்துறையிலும் பங்களித்து வருகிறீர்கள் என்று அறிந்தோம் நீங்கள் நடத்தும் கல்லூரி மற்றும் கல்வி சார்ந்த முயற்சிகள் குறித்து விளக்க முடியுமா?

பதில் : தஞ்சாவூரில் இருந்து கும்பகோணம் வரும் வழியில்தான் திட்ட என்கிற ஊர் இருக்கு. 1964 ல் விவேகானந்தர் நூற்றாண்டு விழா வந்துச்சு அதை ரேனடி என்பவர் நடத்தினார். அப்பவே அறங்காவலரா இரண்டு லட்ச ரூபாய் நான் கொடுத்தேன். அதனால என் பெயரிலேயே கொரட்டூர்ல நல்லி குப்புசாமி செட்டியார் விவேகானந்தா அப்படிங்கிற ஒரு ஸ்கூல் ஆரம்பிச்சாங்க. இன்று வரை 100% பாஸ் பண்றாங்க. வெள்ளைச்சாமி நாடார் மணலி கிருஷ்ணசாமி முதலியார் அவர்களுடைய வாரிசுங்க அவங்களுக்கு நிறைய ஊர்களில் நிறைய இடம் இருந்துச்சு. திட்ட என்கிற ஊர்லயும் அவங்களுக்கு இடங்கள் நிறைய இருந்துச்சு. பாலிடெக்னிக் கல்லூரி ஆரம்பிச்சாங்க. என்கிட்ட வந்தாரு. பெண்கள் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கணும் அப்படின்னு சொன்னாரு. ஓகே சார் ஆரம்பிக்கலாம் அப்படின்னு சொன்னேன். இதுவரைக்கும் நல்லபடியா நடந்துட்டு இருக்கு. நிறைய பெண்கள் நல்லபடியா படிச்சிட்டு இருக்காங்க. இன்னைக்கு வரைக்கும் நல்லா போயிட்டு இருக்கு.

கேள்வி : கருப்பு வெள்ளை சினிமா காலத்திலிருந்து இன்று வரை தீவிர சினிமா ரசிகராக இருக்கிறீர்கள். அந்தக் காலத்தில் யார் உங்களுக்கு மிகவும் பிடித்த நடிகர்? இன்றைய சினிமாவில் உங்களுக்கு மிகவும் பிடித்த நடிகர் யார்?

பதில் : எம்.கே.டி பாகவதர் நடிக்கும் போது நான் குழந்தை. ஆனா பிடிக்கும். சிவாஜி சார் எனக்கு ரொம்ப பிடிக்கும் அதற்கு பின்னாடி எனக்கு ரஜினி, கமல் பிடிக்கும். என்ன காரணமோ எனக்கு ரஜினியை ரொம்ப பிடிக்கும் இப்ப விஜய் பிடிக்கும்.

கேள்வி : நீங்கள் பல ஆண்டுகள் திரைப்படத் தணிக்கை வாரியத்தில் பணியாற்றியுள்ளீர்கள். சென்சார் போர்டில் பணியாற்றிய அனுபவங்கள் பற்றி கூறுங்கள்?

பதில் : நான் 20 வருஷம் சென்சார் போர்டுல இருந்தேன். ஒருமுறை ஒரு ப்ரொடியூசர் வந்தாரு, திரையிடறதுக்கு காசு கொடுக்கணும் அது கூட முடியல அப்படின்னு சொன்னாரு. இசையமைப்பாளர் சங்கர் கணேஷ் அவர்தான் அதற்கு தொகையை கொடுத்தார். அந்த படத்தை நாங்க எல்லாம் பாத்துட்டு அது Cutகொடுத்தாலும் கொடுக்கவில்லை என்றாலும் ஓடப்போறதில்ல நாங்க யோசிச்சு கட் பண்ணாம அந்த படத்தை கொடுத்துட்டோம். அப்புறம் அந்த படத்தை ரிலீஸ் பண்ணதா எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சம்பவம் எனக்கு இன்னும் மறக்காமல் இருக்கு. அதுக்கப்புறம் பெரிய ஃபேமஸா இருந்த ஒரு நடிகர் மோகன் அவர் ஒரு படம் எடுத்திருந்தார் அதைக்கூட ரிலீஸ் பண்ண முடியலின்னு வந்திருந்தார். அதுவும் எனக்கு ரொம்ப கஷ்டமா இருந்தது.நடிகர் விஜய் நடித்த படத்துக்கு அவரும் ப்ரொடியூசர் கூட வருவாரு. ப்ரொடியூச்தான் பேசுவாரு. விஜய் ஏதும் பேச மாட்டார். அப்புறம் ஒரு முறை ஒரு படம் வந்துச்சு அவங்க வாதாட, நாங்க வாதாட 12 மணிக்கு ஆரம்பிச்சு நைட் 3 ஆச்சு இந்த Cut ஐ விட்ருங்க சார் என்று சொல்லுவாங்க. நாங்க விட மாட்டோம்னு சொல்லுவோம். அடுத்த நாள் 12 மணிக்கு சர்டிபிகேட் கொடுத்தோம்.

அப்புறம் இயக்குநர் ஆர்.கே. செல்வமணி ராஜீவ் காந்தி சம்பவம் பற்றி ஒரு படம் எடுத்திருந்தார். ராஜீவ் காந்தியைக் கொன்ற குற்றவாளி யாருன்னு ஜட்ஜ்மெண்ட் வரல. இவர் படத்துல இது மாதிரி உண்மையான சம்பவங்கள் படமா எடுக்கும்போது உண்மையான பெயரை வைக்க மாட்டாங்க. வேற பேரு வைப்பாங்க. இவர் என்ன பண்ணிட்டார்னா உண்மையான பேரே வைத்துவிட்டார். கோர்ட் இன்னும் தீர்ப்பே கொடுக்கல. அதுக்குள்ள அந்த உண்மையான பெயர் இருக்கும்போது எங்களால எதுவும் பண்ண முடியல. அந்த படம் ரிலீஸ் ஆகியிருந்தால் அந்த காலகட்டத்தில் ஓகோன்னு ஓடி இருக்கும். அவர் படம் எடுக்கும்போது கிராபிக்ஸ் எல்லாம் இல்ல, ஆனா படம் முழுக்க அவ்வளவு கூட்டம். ஏவிஎம் பாலசுப்பிரமணியம் அப்ப சென்சார் போர்டுக்கு தலைவரா இருந்தாரு. அவர் கேட்டார் எப்படி இவ்வளவு கூட்டத்தை கூட்டினே அப்படின்னு.

தி பெஸ்ட் மூவி பாக்கணும்னு அது எங்க மெட்ராஸ் கிளப்லதான் பார்க்க முடியும். நல்ல நோக்கத்துக்காக ஆரம்பிச்சது தான் சினிமா டெக்னீசியன்ஸும் வந்து பாப்பாங்க. லோகேஷன் எப்படி இருக்கு? கேமரா எப்படி இருக்கு? அப்புறம் அதனுடைய காஸ்ட்யூம்ஸ் எப்படி இருக்கு? எப்படி எடுக்குறாங்கன்னு அது பயங்கர டிமாண்ட்டாக இருந்தது. அது ஒரு பொற்காலம்னு சொல்லலாம்.

அதுக்குப் பிறகு கொஞ்சம் கரெக்க்ஷன் எல்லாம் பண்ணிட்டு வந்தாரு பார்த்துட்டு சர்டிபிகேட் கொடுக்குற நிலைமை வந்துச்சு. சர்டிபிகேட் கொடுத்துட்டோம் வெள்ளிக்கிழமை கொடுத்தோம். இத உடனே தாமதப்படுத்தாம ரிலீஸ் பண்ணுங்கன்னு நாங்க சொன்னோம் ஏன்னா இடையில ரிலீஸ் பண்ணாம விட்டா கூட யாராவது ஸ்டே வாங்கிடுவாங்க. திங்கட்கிழமை என்ன வேணாலும் நடக்கலாம்னு சொன்னோம் ஆனா என்ன காரணமோ அவங்க ரிலீஸ் பண்ணல. இடையில யாரோ ஸ்டே வாங்கிட்டாங்க, அந்த



படம் அப்புறம் வரவே இல்லை. இது என்னால மறக்க முடியாத சம்பவமாக இருக்கிறது.

கேள்வி : மெட்ராஸ் ஃபிலிம் சொசைட்டி எப்படி உருவானது? அதன் நோக்கம் என்ன? உலகத் திரைப்படங்களை மக்களிடம் கொண்டு செல்வதில் அந்த சொசைட்டி வகித்த பங்கு குறித்து விவரிக்க முடியுமா?

பதில் : 1957 ல் ஆரம்பிச்சது அம்மு சாமிநாதன் என்கிற சோசியல் ஒர்க்கர் தான் ஆரம்பிச்சாங்க இவங்களோட சிஸ்டர் கேப்டன் லட்சுமி அதாவது சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடைய ஆர்மில பணி புரிந்தவர்கள். இவரு லண்டன்ல படிச்சவரு லாயரா இருந்தாரு. அயல் நாட்டு படம்னா அமெரிக்க படம் தான். ஆனா, ஜப்பான் படம் இருக்கு, ரஷ்யா படம் இருக்கு, கொரியா படம் இருக்கு அத்தனை படங்களையும் நாம பார்க்க வாய்ப்பு இல்லை. மோஸ்ட்லி ஜனவரி மாதத்தில் இது மாதிரி உலக படங்களை தியேட்டரில் போடுவார்கள். அங்க நல்ல பரிசு பெற்ற படங்களை தான் போடுவாங்க. நிறைய படம் வந்ததால சென்னையில ஒரு மூணு நாலு தியேட்டர்ல போடுவோம். முதல் நாள்ல நிறைய பேர் வந்து அதை ஆர்வமாக வந்து பாப்பாங்க. ஆனா, அது இப்ப என்ன ஆயிடுச்சுனா? வீட்ல இருந்து எல்லாம் OTT யில பார்த்துவிடுகிறார்கள். அதனால எங்க சொசைட்டினுடைய வேல்யூ கம்மியா தான் இருக்கு.

அன்னைக்கு சூழ்நிலையில தி பெஸ்ட் மூவி பாக்கணும்னு அது எங்க மெட்ராஸ் கிளப்லதான் பார்க்க முடியும். நல்ல நோக்கத்துக்காக ஆரம்பிச்சது தான் சினிமா டெக்னீசியன்ஸும் வந்து பாப்பாங்க. லோகேஷன் எப்படி இருக்கு? கேமரா எப்படி இருக்கு? அப்புறம் அதனுடைய காஸ்ட்யூம்ஸ் எப்படி இருக்கு? எப்படி எடுக்குறாங்கன்னு அது பயங்கர டிமாண்ட்டாக இருந்தது. அது ஒரு பொற்காலம்னு சொல்லலாம். இப்ப கூட நான் இருக்கேன். சுபாஷ் சந்திரபோஸ் இருக்கார். சொ. சிற்சபேசன் இருக்காரு. நாங்க இப்பயும் ஃபாரின் படங்களை எங்க கிளப்பு சார்பா போட்டுகிட்டு தான் இருக்கோம். என்ன கொஞ்சம் கம்மியான கூட்டம் வராங்க.

கேள்வி : நீங்கள் ஒரு திரைப்படத்தில் நடித்ததாக கேட்டோம் அது உண்மையா? அந்தப் படம் எது?

பதில் : ஒரு படத்துல இல்லை ரெண்டு படத்தில் நடிச்சிருக்கேன். காதல் மன்னன் அஜித் படம். டைரக்டர் சரண். அதன் கதைப்படி கதை நாயகன் நாயகி இரண்டு பேரும் போனை எடுக்க கூடாது. அப்படின்னு ஒரு போட்டி போட்டுக்குவாங்க அந்த சமயத்தி நான் நம்ம நல்லி கடையிலிருந்து போன் பண்ணி பேசுவேன் அப்படி ஒரு சீன் நடிச்சேன். அதுக்கு அடுத்தது கணித மேதை ராமானுஜர் அப்படின்னு ஒரு படம் வந்தது அதை எடுத்தவர் டைரக்டர் ஞான ராஜசேகரன் ஐ ஏ எஸ் ஆபிஸர். கேரளாவில் இருந்து வந்தாரு தமிழ்நாட்டுல சென்சார் போர்டு ஆபீஸ்ல இருந்தார். அப்ப ராமானுஜர் பாம்பேயில் இருந்து ட்ரெயின்ல வர்றாரு அவரை ரிசீவ் பண்ணனும் எங்க வீட்ல வந்து தங்குங்க என்று நான் சொல்லணும் அப்படி நடிச்சிருந்தேன். என்கூட நிழல்கள் ரவி, ஒய்.ஜி.மகேந்திரன், சரத் பாபு எல்லாரும் நடிச்சிருக்காங்க. இந்த படத்துல நடிச்சது எனக்கு நிறைவா இருந்தது

கேள்வி : மெட்ராஸ் ஃபிலிம் சொசைட்டியின் வைர விழாவில் 'நல்லி MFA விருது' வழங்கி, எஸ்.பி. முத்துராமன், பி.சுசீலா, சரோஜாதேவி உள்ளிட்ட மாமேதைகளை கௌரவித்தீர்கள். கொரோனாவுக்குப் பிறகு அந்த விருது நிகழ்வு தொடரவில்லை அது மீண்டும் தொடருமா?

பதில் : அதை செய்யணும்னு மனசுல எண்ணம் இருக்கு. அதை A to Z பாத்தது சுபாஷ் சந்திரபோஸ். அவர் கூட ஒரு செட் இருக்காங்க அவங்க தான் பாத்துக்கிட்டாங்க. காலம் சரியா இருந்தா அது மேற்படி தொடரும்னு நினைக்கிறேன் பாப்போம். உங்கள் கலைப்பணி தொடர திரை மொழி இதழ் சார்பாக வாழ்த்துகிறோம்.



மூர்த்தி நடராஜன்
பொறுப்பாசிரியர், திரைமொழி - 95000 74478



அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் “பாஞ்சாலி” குறும்பட திரையிடல்

தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறையின் பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், திரைமொழி சமூக நல அறக்கட்டளை மற்றும் ட்ரினிட்டி கல்விக் குழுமம் இணைந்து நடத்திய “குறும்படத் திரையிடல்” நிகழ்ச்சியில், திரைப்பட இயக்குநர் திரு. ஆர். சுப்ரமணிய பாரதி இயக்கிய “பாஞ்சாலி” குறும்படம் 13.06.2026 (சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு திரையிடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு திரைமொழி சமூக நல அறக்கட்டளையின் பொதுச் செயலாளரும், சமூக ஆர்வலருமான அருள்நிதி Dr. கே. குரு அரங்கதுரை அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மூத்த அரசியல் அலுவலர் திரு. இரா. கண்ணன் அவர்கள் சிறப்புரையாற்றி, திரைப்படங்களின் சமூகப் பொறுப்பையும் அவற்றின் தாக்கத்தையும் வலியுறுத்தினார்.



எழுத்தாளர், கவிஞர் மற்றும் ஆவணப்பட இயக்குநரான திரு. ரவி சுப்பிரமணியன் அவர்கள் வாழ்த்துரை யாற்றினார். ட்ரினிட்டி கல்விக் குழுமத்தின் தலைவர் மற்றும் இயக்குநரான திருமதி டாக்டர் ஜூடா எமெலன்சியா டியூக் மரியாவிலிங்டன் அவர்கள், தமது பள்ளி மாணவர்களுடன் நிகழ்வில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்.

குறும்படத் திரையிடலுக்குப் பிறகு, மாணவர்கள் மற்றும் பார்வையாளர்களின் பங்கேற்புடன் “பாஞ்சாலி” குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த அமர்வில் திரைமொழி சமூக நல அறக்கட்டளையின் பொருளாளர் திரு. மூர்த்தி நடராஜன் மற்றும் துணைத் தலைவர் அருள்நிதி திரு. ச. ஜெகநாதன் ஆகியோர் நெறியாள்கை செய்து, பார்வையாளர் களின் கருத்துகள் மற்றும் கேள்விகளைப் பதிவு செய்தனர்.

பார்வையாளர்களின் கேள்வி களுக்கு இயக்குநர் ஆர். சுப்ரமணிய பாரதி, படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த பரோட்டா முருகேசன், மற்றும் படக்குழுவினர் விரிவாக விளக்கமளித்தனர். குறும்படத்தின் கரு, படைப்பாக்கப் பின்னணி, சமூகச் செய்தி மற்றும் தயாரிப்பு அனுபவங்கள் குறித்து நடைபெற்ற உரையாடல் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இந்நிகழ்வில் இசையமைப்பாளர் அமர்கீத் கலந்து கொண்டார்.

கலந்துரையாடலின் இறுதியில் திரு. இரா. கண்ணன் அவர்கள் இலக்கியம், மனிதநேயம் மற்றும் திரைப்படக் கலை ஆகியவற்றை இணைத்துச் சிந்திக்க வைக்கும் கருத்துகளைப் பகிர்ந்து, நிகழ்விற்கு தனித்துவமான பரிமாணத்தை வழங்கினார். அதையொட்டி தொடர்ந்து கலந்துரையாடலின் நிறைவில், கவிஞர் திரு. ரவி சுப்பிரமணியன் அவர்கள் தனது இனிய குரலில் பாடல்களைப் பாடி நிகழ்வை மேலும் சிறப்பித்தார்.

சுமார் 135க்கும் மேற்பட்ட திரைப்பட ஆர்வலர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வை வெற்றிகரமாக நடத்த ஒத்துழைப்பு வழங்கிய அண்ணா நூற்றாண்டு நூலக நிர்வாகத்தினருக்கு நிகழ்வில் பங்கேற்று ஆதரவு அளித்த அனைவருக்கும் இயக்குநர் திரு. ஆர். சுப்ரமணிய பாரதி நன்றி தெரிவித்தார்.

‘கல்வி ஒன்றுதான் விளிம்புநிலை மனிதர்களை உயர்த்தும் ஆகச்சிறந்த ஆயுதம்’ பாஞ்சாலி விமர்சனம்

‘கல்வி ஒன்றுதான் விளிம்புநிலை மனிதர்களை உயர்த்தும் ஆகச்சிறந்த ஆயுதம்’ என்ற ஒற்றை வரியை நோக்கி, மிக அழுத்தமாக நகர்கிறது திரைக்கதை. ராமநாதபுரம் மாவட்டப் பின்னணியில், ஆடு மேய்க்கும் விளிம்புநிலைச் சமூகத்தைச் சேர்ந்த ஒரு தாத்தா, தன் பேரனைத் தன் வழியே வரவிடாமல் தடுத்து, அவனுக்கு எவ்விதமாவது கல்வி புகட்ட வேண்டும் என்று போராடும் வாழ்வியல் போராட்டமே இக்கதை.

ஏழ்மையும், அறியாமையும் சூழ்ந்த ஒரு சூழலில், கல்வி மட்டுமே ஒரு தலைமுறையின் தலையெழுத்தை மாற்றும் என்பதை எந்தவித வணிகப் பூச்சுக்களும் இன்றி, யதார்த்தமாகப் பதிவு செய்துள்ளார் இயக்குநர் ஆர். சுப்பிரமணிய பாரதி. 29 நிமிடங்களுக்குள் சொல்ல வந்த கருத்தை எவ்வித திசைதிருப்பலும் இன்றி ஆழமாகக் கடத்தியிருப்பது இயக்குநரின் முதிர்ச்சியைக் காட்டுகிறது.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி அருகே உள்ள தாதனேந்தல் கிராமத்திலேயே முழுப் படப்பிடிப்பும் நடந்துள்ளது. அங்குள்ள மக்களின் யதார்த்தமான வாழ்வியலையும், வறண்ட நிலத்தின் சூழலையும் ஒளிப்பதிவாளர் கோகுல் தன் கேமராவிற்குள் நேர்த்தியாகக் கடத்தியுள்ளார். செயற்கைத்தனமில்லாத கோணங்கள் படத்திற்குப் பெரும் பலம்.

படத்தில் நடித்த பெரும் பாலானோர் ராமநாதபுரத்தைச் சேர்ந்த உள்ளூர் மக்களே (சிறுவன் தீபக், உதவித் தலைமையாசிரியர் ஜாகீர் மற்றும் ஊர் மக்கள்). தொழில்முறை நடிகர்கள் இல்லாதது படத்திற்கு ஒரு ஆவணப்படம் போன்ற போலித்தன மில்லாத உண்மைத்தன்மையைக் கொடுத்துள்ளது. அவர்களின் முகபாவனைகளும், உடல்மொழியும் அத்தனை யதார்த்தம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகியான என். கலையரசன் எழுதியுள்ள கதை மற்றும் வசனங்கள், கல்வி மறுக்கப்படும் எளிய மக்களின் வலியைச் சுளீரென்று பார்வையாளர்களுக்குக் கடத்துகின்றன. ஒவ்வொரு வசனமும் அதிகார வர்க்கத்தின் மீதும், சமுதாயக் கட்டமைப்பின் மீதும் சாட்டையடியாக விழுகின்றன.

தாத்தாவாகவே வாழ்ந்திருக்கும் ‘பரோட்டா முருகேசன்’ முதல்

> 7ம் பக்கம் பார்க்க







முதல் பக்கத் தொடர்ச்சி

விரும்புகிறேன். ஒரு மனிதனுக்குள் புதைந்து கிடக்கும் திறமையை பார்த்தவுடன் தெரிந்து கொள்வது ஒரு ஆதர்ஷ சக்தி.புதைந்து கிடக்கும் திறமையை அறிந்து, அதனை தன் வழியிலே இந்த உலகுக்குகொண்டு வரும் பேராண்மை தான் அவரது தொடர் வெற்றிக்கு காரணமாக நான் உணர்கிறேன்.

தமிழ் திரையுலகம் தன் நூற்றாண்டை 2031 இல் கொண்டாட உள்ளது. பேசும் படத்தில் முதல் சூப்பர் ஸ்டாராக M.K.T.பாகவதர், அவருக்கு சமமாக P.U.சின்னப்பா இருந்தார். இருவரின் காலம் முடிந்து எம்.ஜி.ஆர், சிவாஜி என இரண்டு பேரும் கலைஞர்கள் உலகத் தமிழர்களின் வாழ்வில் அங்கமாகி,அடுத்த தலைமுறை நடிகர்கள் கமல், ரஜினி காலம் தொடங்கிய நேரத்தில், இந்த நட்சத்திரங்களுக்கு இணையாக கொண்டாடப்படும் திரைக்கலைஞனாக, இயக்குநராக வாழ்ந்தவர் பாரதிராஜா. அவருக்கு முன்னும் திறமை மிக்க, புகழ்மிக்க இயக்குநர்கள் இருக்கத்தான் செய்தார்கள். எல்லிஸ் ஆர். டங்கன் தொடங்கி, கிருஷ்ணன் பஞ்சு, பா. நீலகண்டன், பி. மாதவன், A.C.திருலோகச்சந்தர், ஸ்ரீதர், பாலச்சந்தர், பாலுமகேந்திரா என ரத்தினங்களாக மின்னியவர்கள் இருந்தனர். மக்கள் கலைஞனாக, மக்கள் சினிமாவை தொடங்கி வைத்தவர் பாரதிராஜா தான்.

எனக்குத் தெரிந்து தமிழகம் முழுவதும் ரசிகர் மன்றம் இருந்து கொண்டாடிய ஒரே இயக்குநர் பாரதிராஜா தான். பிற்காலத்தில் அவரே ரசிகர் மன்றம் வேண்டாமெனக் கலைத்து விட்டார். பல இயக்குநர்களிடம் உதவி இயக்குநராக அவர் பணியாற்றி யிருந்தாலும், புட்டண்ணா கனகலை மட்டும்தான் குருவாக ஏற்றுக் கொண்டார். கன்னட இயக்குநர் புட்டண்ணா கனகலின் திரைக்காவியம் போலவே விஷுவல் மேக்கிங் இயக்குநரின் படங்களில் தெளிவாக தென்படும். பாரதிராஜாவின் தனி முத்திரைக்கு காரணம் அவரது படத்தொகுப்பு (EDITING) பாணிதான். இந்த பாணிதான் இந்தியாவிலே முதன்முறையாக இவர் மட்டுமே அல்லது இவருக்கு மட்டுமே தெரிந்த யுத்தி. இந்த மந்திரவித்தையை யாரும் தொட முடியாதது தான் இவரது படங்களின் தனிச்சிறப்பு

Bounded Script, திட்டமிடுதல், பொருளாதார வியாபார கணக்குகள் என்று அடிப்படையான பல சடங்குகளை தவிர்த்து தவிடு பொடியாக்கிய ஒரே இயக்குநர் தமிழ் திரையுலகில் இவர் மட்டுமே. கதை



முடிவு செய்யப்பட்டால், கதையின் விதை முடிவு செய்தவுடன் சூட்டிங் கிளம்பும் தன் எழுச்சிக் கலைஞன். திரைக்கதை என்பது தாளில் இருப்பவை அல்ல, திரையில் எழுதப்பட வேண்டியது. அதனை எழுதும் இடம் எடிட்டிங் அறை என்று செயல்பட்டவர். வசனம் என்பது அறிவு பரிமாற்றம் அல்ல உணர்ச்சி பகிர்வு என களத்தில் தோன்றிய நாற்றாக பயிரிட்டவர். இயக்கம் என்பது இதயங்களை இணைக்கும் உணர்ச்சிப் பின்னல் என உணர்ந்து கொண்டவர்.

Technical Craft பத்தும் எளிமையாக இருக்க வேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு படைப்புகளைத் தந்தவர். உணர்ச்சிகளால் உருவாக்கப்பட்ட படைப்பாளிஎன்பதால் தான் தலைமுறைகள் தாண்டி அவர் வெற்றிகள் தொடர்ந்தன. இதுவரை 400க்கும் மேற்பட்ட கலைஞர்களை திரையில் அறிமுகம் செய்து வைத்துள்ளார். 50 படங்களுக்கு மேல் இயக்கியுள்ளார். மூன்று படங்களுக்கு மட்டும் கதை எழுதியுள்ளார். பத்மஸ்ரீ விருதும், ஆறு தேசிய விருதும், பல மாநில விருதுகளும் பெற்றவர். மத்திய அரசு அவருக்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்கி திரைப்படத்துறைக்கு அவரால் நிகழ்ந்த புதுமைக்கு மகுடம் சூட்ட வேண்டும். ஆளுமை மிக்க சிங்கமான, நீங்கா புகழுடன் 50 ஆண்டுகள் வாழ்ந்து படைப்புகளால் இன்னும் பல நூற்றாண்டுகள் வாழப் போகிறார்.

என்றும் அவர் நினைவில் வாழும் மாணவன்.

இயக்குநர் V.ஜெயபிரகாஷ்

பக்கம் 6 தொடர்ச்சி

மரியாதை படத்தில் நடித்த 'வீரச்சாமி'யை நினைவூட்டுகிறார். விளிம்பு நிலை மனிதனின் இயலாமை, ஆற்றாமை, கருணை என தனது அசாத்தியமான நடிப்பினை மீண்டும் நிரூபித்துள்ளார். பொறுப்பில்லாத மகன், விட்டுச் சென்ற மருமகள் ஆகியோர் மீது எவ்விதப் பழியோ, வெறுப்போ காட்டாமல், தமது வாரிசான பேரனை எப்பாடு பட்டவாது படித்து வைத்திடத் துடிப்பது என கிராமங்களின் யதார்த்த மனிதரை கண் முன் நிறுத்துகிறார். 'யதார்த்தவாதமே வெல்லும்' என்பதற்கு இந்தப்படமும் ஒரு சாட்சி.


ஆண்ட வர்க்கத்தின் ஆணவமும், அடிமை வர்க்கத்தின் இயலாமையும் அதனதன் போக்கில் உள்ளதை உள்ளபடி அடிக் கோடிட்டுச் செல்வது கூடுதல் பலம். ஆட்டின் வழியே ஒரு ஏற்றத் தாழ்வு நிறைந்த சமுதாயத்தின் உண்மை நிலையை உரக்கச் சொல்லியிருக்கிறார் இயக்குநர். ஒரு முழு நீளத் திரைப்படம் பார்த்த அனுபவத்தையும், மனதில் ஒரு தாக்கத்தையும், கல்வி ஒன்றே சமுதாய மாற்றத்தைத் தரும் என்கிற உறுதியை இக்குறும்படம் தந்திருக்கிறது.

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் மற்றும் இன்னோவேட்டிவ் பிலிம் அகாடமி இணைந்து நடத்திய சர்வதேச குறும்பட விழாவில் (ISFF), உலகம் முழுவதிலு மிருந்து வந்த 600க்கும் மேற்பட்ட குறும்படங்களைப் பின்னுக்குத் தள்ளி, இத்திரைப்படம் முதல் இடத்தைப் பிடித்து சாதனை படைத்தது. எடிட்டர் லெனின், நடிகர் நாசர், நடிகை அர்ச்சனா போன்ற இந்திய சினிமாவின் மூத்த ஆளுமைகள் அடங்கிய நடுவர் குழுவால் இது சிறந்த படமாகத் தேர்வு செய்யப்பட்டது, இப்படத்தின் உலகளாவிய தரத்திற்குச் சான்றாகும்.

இயக்குநர் ஆர். சுப்பிரமணிய பாரதியின் 'பாஞ்சாலி' வெறும் படமல்ல, விளிம்புநிலை மக்களின் கல்வி உரிமைக்கான உரத்த குரல். சமரசமில்லாத எளிய மனிதர்களின் கதையை நேர்மையாகச் சொல்லி யிருக்கும் இந்த சர்வதேச விருது பெற்ற படைப்பு, உலகத்தர சினிமா ரசிகர்களும், சமூக ஆர்வலர்களும் தவறவிடக் கூடாத ஒன்று.



நூலகர் Dr.துரை. இரவிகிருஷ்ணன்
அண்ணா நூற்றாண்டு நூலகம்,
சென்னை




இந்திய குடியரசுத் துணைத் தலைவர் இயக்குநர் சீனுராமசாமிக்கு பாராட்டு மடல்



இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் தனது அதி காரப்பூர்வ கடிதத்தில், கலை, சமூகம் மற்றும் இலக்கிய உலகிற்கு இயக்குநர் சீனு ராமசாமி ஆற்றிவரும் பன்முகப் பங்களிப்பைப் பாராட்டியுள்ளார். குறிப்பாக, அவரது 'சில பூக்கள்' கவிதையை வெகுவாகப் புகழ்ந்துள்ள அவர், எவ்விதப் புகழையோ அங்கீகாரத்தையோ எதிர்பாராமல், தங்களது நற்செயல்களால் நறுமணம் பரப்பி, அமைதியான தார்மீகக் குணத்துடனும் சுயநலமின்றியும் வாழும் மனிதர்களை இக்கவிதை மிக அழகாகக் கொண்டாடுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

மிக முக்கியமாக, நாடு முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளில் 'திரைப்பட ரசனைக் கல்வி'யை (Film Appreciation Education) அறிமுகப்படுத்துவதற்கான இயக்குநர் சீனு ராமசாமியின் தேசிய அளவிலான முன்மொழிவையும் துணைக் குடியரசுத் தலைவர் கவனத்தில் கொண்டுள்ளார். இத்திட்டம், நாடு முழுவதும் உள்ள இளம் மாணவர்களிடையே காட்சி சார்ந்த அறிவு (Visual Literacy), பிறர் நிலை



VPI-01/2026

भारत के उपराष्ट्रपति
VICE-PRESIDENT OF INDIA

June 09, 2026

Dear Shri Seenu Ramasamyji,

Vanakkam!

I am writing to thank you for sharing all your literary works, including "சினிமாவின் ஆன்மா". I was truly delighted to peruse them. Your distinguished contributions as a filmmaker, poet, and author reflect a deep commitment to enriching society through art and literature.

I would like to appreciate in particular the poem 'சில பூக்கள்' in the book "நதியழகி". Through the metaphor of flowers, you have celebrated people who live with quiet kindness, integrity, and generosity. Like flowers that bloom and spread their fragrance without seeking recognition, they enrich the lives of others through their selfless actions. The poem conveys a profound message that true worth lies not in fame or visibility, but in the goodness we bring to the world.

As regards your proposal to introduce Film Appreciation Education in Government schools across the country, I have noted it.

I wish you good health, happiness, and continued success in your future endeavours.

With kind regards,

Always in the service of the Motherland!

(C. P. Radhakrishnan)

Shri Seenu Ramasamyji
Filmmaker & Poet

உணரும் பண்பு (Empathy) மற்றும் சமூக விழிப்புணர்வை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு உன்னதமான தொலைநோக்குப் பார்வையாகும்.

இந்தப் பாராட்டு குறித்து இயக்குநர் சீனு ராமசாமி விடுத்துள்ள அறிக்கையில்:



"மாண்புமிகு இந்தியத் குடியரசு துணைத் தலைவர் அவர்களின் கனிவான வார்த்தைகளால் நான் ஆழ்ந்த நெகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். அவரைப் போன்ற உயர்ந்த ஆளுமை மிக்க ஒரு தலைவர், தனது பொன்னான நேரத்தைச் செலவிட்டு எனது கவிதைகளையும் புத்தகங்களையும் வாசித்துப் பாராட்டியிருப்பது ஒரு கலைஞனாக எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமையாகும். 'சில பூக்கள்' கவிதையின் ஆழமான சாராம்சத்தை அவர் துல்லியமாகப் புரிந்து கொண்டு வாழ்த்தியிருப்பது எனது இதயத்தைத் தொட்டது. மேலும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு திரைப்பட ரசனைக் கல்வியைக் கொண்டு சேர்க்கும் எனது முன்மொழிவை அவர் ஏற்றுக்கொண்டிருப்பது, இந்தியாவில் படைப்பாற்றல் மிக்கக் கல்வியின் எதிர்காலம் குறித்த பெரும் நம்பிக்கையை எனக்கு அளித்துள்ளது. அவருடைய வாழ்த்துகளையும் ஆசிகளையும் மிகுந்த மரியாதையுடன் ஏற்றுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.


யதார்த்தமான தமிழ்த் திரைப்படங்களின் மிக முக்கியமான குரலாகவும், நவீன கவிதைகளின் வழி பேசும் இயக்குநர் சீனு ராமசாமி, சமீபத்தில் தனது இலக்கியப் படைப்புகளைத் குடியரசு துணைத் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பியிருந்தார். அதனையேற்று இந்த உயரிய பாராட்டு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

கலைஞன் ஒரு ஷாட்டில் கூட உயிர் வாழ முடியும்

உலக சினிமா எங்கே திரையிட்டாலும், நல்ல இலக்கிய கூட்டங்கள் எங்கே நிகழ்ந்தாலும், ஓவிய சிற்பக் கண்காட்சிகள் நிகழ்ந்தாலும் அங்கே சத்யேந்திரா இருப்பார்.

ஃபிலிம் சேம்பர், ஆனந்த் தியேட்டர், சத்தியம் தியேட்டர், நாரத காண சபா, மியூசிக் அகாடமி, அலையன்ஸ் பிரான்சிஸ் ஒன்று எத்தனையோ இடங்களில் அவரை சந்திக்கலாம். கொஞ்சம் அழுக்காக, கலைந்த தாடி மீசையுடன், பார்ப்பதற்கு வறுமை தாக்கிய தோற்றத்தில், ஜோல்னா பையோடு நிற்கும் அந்த கலைஞனை நெருங்குவதற்கு சாதாரண கண்களும், கால்களும் தயங்கும்.

நடிகர், மொழிபெயர்ப்பாளர், உதவி இயக்குனர், கலை விமர்சகர் என்ற பல முகங்கள் அவருக்கு உண்டு. "தோல்வி அடைந்தவர்களை பார்த்தால் நின்று பேசக்கூட கூச்சப்படும் இந்த உலகம். அவர்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகள் வெளிப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் அமைந்திருக்காது அதற்கும் பல காரணங்கள் இருக்கும்.



வாழ்க்கை எத்தனையோ மனிதர்களை கோபுரத்தில் வைக்கிறது. எத்தனையோ மனிதர்களைக் குப்பை தொட்டியில் வீசுகிறது. இரண்டுக்கும் காரணம் யாருக்கும் தெரியாது. வீசும் காற்றில் எது எங்கே போய் உட்காரும் என்பது விதியின் பகடையாட்டம். மனிதர்களை மதிப்பிடாமல் அவர்களை மதிப்பதுதான் வாழும் போது அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதை. கலைஞர்களுக்கு இந்த ஆறுதல் ரொம்ப ரொம்ப அவசியம்.

உங்கள் மனதுக்குள் நீங்கள் என்னென்ன கனவுகள் வைத்திருந்தீர்களோ ?தெரியாது. மரணம் எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைத்து விட்டது. ஆனால் விதைத்த விதைகள் எப்படியாவது முளைக்கும் என்பது ஒரு ரகசிய நியதி. உங்கள் விதைகளும் துளிர்க்கும்...செழிக்கும் ....மலரும்... என்றே நான் நம்புகிறேன். இது நம்பிக்கையா? மூடநம்பிக்கையா? என்பது தெரியவில்லை... எப்படி இருந்தாலும் அந்த வார்த்தைகள் எனக்கு இப்போது தேவையாக இருக்கிறது. உங்கள் வாழ்க்கைக்கும் மரணத்திற்கும் அர்த்தம் சொல்ல வேறு ஒரு சொல் இப்போது இல்லை. சென்று வாருங்கள்... கலைஞன் ஒரு ஷாட்டில் கூட உயிர் வாழ முடியும். #நாக்அவுட் திரைப்படத்தின் மூலம் உலக சினிமாவின் உயரத்தில் என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள். "சாவுக்கு உருவம் கொடுத்தவன் சத்யந்திரா" என்பதை யாராலும் மறுக்க முடியாது.

- இயக்குநர் பிருந்தாசாரதி

திரை மொழி THIRAI MOZHI
TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்
PRGI (RNI) No: TNTAM/2023/88599

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
துணை ஆசிரியர் : சிவயோகி மவுரியன்
கௌரவ ஆசிரியர்கள் : குரு அரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்

தொடர்புக்கு :
Website: Thiraimozhi.com
Email : info@thiraimozhi.com
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**